## சென்னை கிழக்கு மாவட்டம்

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் எழும்பூர், அம்பத்தூர், கொளத்தூர், துறைமுகம் தொகுதிகளில் நடைபெறும் ஆலோசனைக்கூட்டம் மற்றும் வாக்கு சேகரிப்பு விவரம்!



### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

| நாள்: 7.4.2026 செவ்வாய்க்கிழமை | பகுதி | இடம் |
|---|---|---|
| காலை 7.00 மணி | எழும்பூர் சட்டமன்றத்தொகுதி கழக வேட்பாளர் தமிழன் பிரசன்னா அவர்கள் 108வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு | ஹாரிங்டன் சாலை, பச்சையப்பன் சாலை எழும்பூர் தெற்கு பகுதி |
| காலை 9.00 மணி | அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி பகுதி கழக செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம் | அம்பத்தூர் கிழக்கு பகுதி தேர்தல்பணிமனை அலுவலகம் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி |
| காலை 10.00 மணி | கொளத்தூர் சட்டமன்ற தொகுதி அனிதா அச்சீவர்ஸ் அகாடமி களப்பணியாளர்களுக்கு திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆலோசனை வழங்குதல் | அம்ரீஷ் மகால் திரு.வி.க.நகர்பேருந்து நிலையம் எதிரில் கொளத்தூர் கிழக்கு பகுதி |
| காலை 10.30 மணி | கொளத்தூர், வில்லிவாக்கம், துறைமுகம், எழும்பூர் தொகுதி பகுதி கழக செயலாளர்கள் , வட்டகழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக்கூட்டம் | அம்ரீஷ் மகால் திரு.வி.க.நகர்பேருந்து நிலையம் எதிரில் கொளத்தூர் கிழக்கு பகுதி |
| காலை 11.00 மணி | கிறிஸ்தவ மத தலைவர்களை சந்தித்தல் | துறைமுகம் சட்டமன்ற தொகுதி |
| மாலை 5.00 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 57, 57அ வட்டங்களில் கழக வேட்பாளர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் வாக்குசேகரிப்பு | NSC போஸ் ரோடு, தங்கசாலை சந்திப்பு சின்னகடை அம்மன் கோவில் அருகில் துறைமுகம் மேற்கு பகுதி |
| மாலை 7.00 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதி தமிழ்நாடு பார்கவ குலச் சங்க பிரதிநிதிகளுடன் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் சந்திப்பு | குளோப் திருமண மாளிகை ஏழுகிணறு துறைமுகம் கிழக்கு பகுதி |

மேற்கண்ட ஆலோசனைக்கூட்டங்களில் மற்றும் வாக்குசேரிப்பிலும் குறிப்பிடப்பட்டர்களும் அந்தந்த பகுதிக்குட்பட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டு கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில்

# சைதாப்பேட்டையில் கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து நடைபெறும் வாக்குச் சேகரிப்புப் பரப்புரைக் கூட்டங்கள்



| நாள் மற்றும் நேரம் | பரப்புரை நிகழ்த்துவோர் | இடம் |
|---|---|---|
| 9–4–2026 மாலை 6 மணி | உதயநிதி ஸ்டாலின் மாநில இளைஞர் அணி செயலாளர் | கங்கையம்மன் கோயில் தெரு, ஜாபர்கான்பேட்டை |
| 13–4–2026 மாலை 6 மணி | டி.ராஜா அகில இந்திய பொதுச்செயலாளர் – சி.பி.ஐ | மடுவின்கரை |
| 14–4–2026 மாலை 6 மணி | கமலஹாசன் தலைவர் – மக்கள் நீதி மய்யம் | ஆலந்தூர் சாலை, ஐந்துவிளக்கு அருகில் |
| 15–4–2026 மாலை 6 மணி | ஆசிரியர் கி.வீரமணி தலைவர் – திராவிடர் கழகம் | பூவிருந்தவல்லி சாலை, ஈக்காட்டுத்தாங்கல் |

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி – சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி.**



சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் – மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் வேட்புமனு தாக்கல் செய்தார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அண்ணநகர் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு, அண்ணாநகர் வடக்கு பகுதி, 101வது வட்டத்திற்குட்பட்ட கீழ்பாக்கம் மண்டபம் ரோடில் தொடங்கி வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எம்.கே.மோகன், எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் ச.பரமசிவம், தொகுதி பார்வையாளர் வே.கௌதமன், வட்டக்கழக செயலாளர் க.கோவிந்தராஜ், தோழமை கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கழக வெற்றி வேட்பாளர், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஆதரவாக சேப்பாக்கம், 62 வது வட்டம், 4 வது பாகத்தில் மாவட்ட துணை அமைப்பாளர் பி.பால சந்தர் தலைமையில், பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.மதன்மோகன் முன்னிலையில் களத்தில் இளைஞர் அணியினர் வாக்கு சேகரித்தனர். இதில் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் பி.கே.பாபு, வட்டச் செயலாளர் ஆர்.ஜெகதீசன், பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஜி.ஜெ.கிரிதரன், வட்ட இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக் மற்றும் வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடம் கழக வேட்பாளர் ஆ. கிருஷ்ணசாமி பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய உட்பட்ட காட்டுப்பாக்கம் சென்னீர்குப்பம் ஆகிய ஊராட்சிகளில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச. கமலேஷ் தலைமையில் உதய சூரியன் சின்னத்திற்கு வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார். உடன் தொகுதி பொறுப்பாளர் பிடிசி.செல்வராஜ், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார், நிர்வாகிகள் எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், டி.அண்ணாமலை, ஏ.ஜனார்த்தனன், கே.எஸ்.புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், க.பரிமேலழகன், கே.விக்னேஷ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஏ.ஜி.ரவி, குமரேசன், என்.சண்முகம், எம்.ராம்பாபு, டி.திருமாலை ராஜ், கே.ஜி.ஆர்.ஸ்டாலின், கேசவன், வெங்கடேசன், திருலோகசுந்தர், வழக்கறிஞர் ஜி.டி.அருண்குமார் உள்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா க.அ. இராசப்பா
### ஏப்ரல் 7 (1993)



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராக இருந்தவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணியில் குமரி மாவட்டத் தலைவராகவும், பின்னர் மாவட்ட கழகத் துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக பாளையங்கோட்டை சிறையில் ஒரு வருடம் இருந்தவர்.

1986ல் நடைபெற்ற சட்ட எரிப்பு போராட்டத்தின்போது நெஞ்சு வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் “செந்தமிழுக்கு ஒரு தீங்கு வந்த பின் இந்த தேகம் இருந்தென்ன லாபம்” என சொல்லி மருத்துவமனையிலிருந்து சிறைபுகுந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சிவகங்கை மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள்

# அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - ஆர்.தமிழரசி - கருணாஸ் - எஸ்.மாங்குடி வேட்பு மனு தாக்கல்!

சிவகங்கை. ஏப். 7 –

தமிழகத்தில் வருகிற 23ம்தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 234 சட்டமன்ற தொகுதியிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இதில் சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர், சிவகங்கை, காரைக்குடி, மானா மதுரை ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகள் உள்ளது . சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மாவட்ட கழக செயலாளர் கூட்டு றவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் ஐந்தாவது முறையாக தனது வேட்புமனுவை தேர்தல் அலுவலர் சிவபாலனிடம்

தாக்கல் செய்தார். மாற்று வேட்பாளராக அவரது மனைவி திருமதி பிரேமா பெரிய கருப்பன் செய்தார். இவருடன் மாநில கழக செய்தி தொடர்பு துணைத்தலைவர் மருது அழகுராஜ், காங்கிரஸ் பன்னீர், தனசேகர் தே.மு.தி.க. வழக்கறிஞர்கள் எஸ்.பாஸ்கரன், முத்துராமலிங்கம் ஆகியோர் சென்றார்கள்.

2.மானாமதுரை மானாமதுரையில் இரண்டாவது முறையாக போட்டியிடும் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் மானாமரை வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார் மாற்று வேட்பாளராக ரவிக்குமார் வேட்புமனுத் தாக்கல் செய்தார்.


3. சிவகங்கை. சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் முக்குலத்தோர் புலிப்படை சார்பில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் நடிகர் கருணாஸ் தனது வேட்புமனுவை சிவகங்கை கோட்டாட்சியர் செல்வி ஜெபியா கிரேஸிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார் .

4. காரைக்குடி சட்டமன்ற தொகுதியில்இரண்டாவது முறையாக போட்டியிடும் வேட்பாளர் எஸ். மாங்குடி தனது வேட்புமனுவை தேவகோட்டை சார்ஆட்சியர் ஆயுஷ் வெங்கட்டிடம் தாக்கல் செய்தார். நான்கு மாவட்டங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வேட்பாளர்களை கூட்டணி கட்சியினர் மாலை,சால்வை அணிவித்து வாழ்த்து கூறினார்கள் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், வழக்கறிஞர். அ. கணேசன் முன்னாள் எம்.எல்.ஏ க்கள் சுப.மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, மருத்துவர் கோகுலகிருஷ்ணன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, பி.டி.ஆர்.முத்து, ந.அம்பல முத்து.

மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் தோழர் திருமதி ஹேமலதா செந்தில், முன்னாள் அமைச்சர் ஒன்றிய செயலாளர்கள் எஸ். சண்முகவடிவேல் விராமதி மாணிக்கம், பி.செல்வராஜ், பூமணி, கே பாலசுப்பிரமணியன், குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், நாகனிரவி, வழக்கறிஞர் வே.பூபால சிங்கம், அமைச்சர் பெரிய கருப்பன் திருப்பத்தூரில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.வி.பி. ஆசைத்தம்பி
### ஏப்ரல் 7 (1979)



கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும், கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில் சட்டப்பேரவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்டவர்.

பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலேதான் வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட இவரை வாலிபப் பெரியார் என்று நண்பர்கள் – தோழர்கள் அன்போடு அழைப்பார்கள்.

“கழகத்தின் கருவூலம், தன்மான இயக்கத்தின் சிங்கம், தந்தை பெரியாரின் மாணவர், பேறறிஞர் அண்ணா அவர்களின் அன்புத்தம்பி, எனக்கு உற்ற தோழர்” என தலைவர் கலைஞர் தனது உரையில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**